<u>செய்தி வெளியீடு எண்.296</u> <u>நாள்.05.06.2013</u>

<u>**சென்னை அரசு மைய அச்சகத்தில் மின்கசிவு காரணமாக ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்ட கழிவுக் காகித கிடங்கினை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி பார்வையிட்டார்.**</u>

சென்னை அரசு மைய அச்சகத்தில் மின்கசிவு காரணமாக ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்ட கழிவுக் காகித கிடங்கினை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி பார்வையிட்டார்.

இன்று (05.06.2013) காலை சென்னை தங்கசாலையில் உள்ள அரசு மைய அச்சகத்தில் மின்கசிவு காரணமாக ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்ட காகிதக் கிடங்கினை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி பார்வையிட்டார்.

தீவிபத்து நடந்தவுடன் தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். இதன்மூலம் பிற இடங்களில் தீ பரவாமல் தடுக்கப்பட்டது. இதனால் எந்தவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

கழிவுக் காகித கிடங்கில் ஏற்பட்ட தீவிபத்தில் 100 டன் கழிவுக் காகிதங்கள் எரிந்து விட்டன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரசு மைய அச்சகத்தில் நான்காயிரம் சதுர அடி பரப்பில் ரூ.60 இலட்சம் செலவில் புதிய சேமிப்புக் கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப., அச்சுத் துறை இயக்குநர் திரு.ஆபிரகாம், இ.ஆ.ப., மற்றும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.ரவிராஜ், உதவி செயற்பொறியாளர் திரு.இஸ்முதீன் ஆகியோர் உடன் இருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு, சென்னை–9.